[1982 பிப்ரவரி 2

பேராவூரணி அரசு மருத்துவ மனையில் சித்த மருத்துவப் பிரிவு தொடங்கும் திட்டம்.

*வினா எண். 15— திரு எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பேராவூரணி அரசினர் தாலுகா தலைமை மருத்துவ மனையில் சித்த மருத்துவப் பிரிவு தொடங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில், எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) : பேராவூரணி அரசு மருத்துவ மனையில் சித்த மருத்துவப் பிரிவு 1981-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23-ஆம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது.

திரு எம் ஆர் கோவேந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி அரசு மருத்துவ மனையில் சித்த மருத்துவப் பிரிவைத் தொடங்கியதற்கு இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, தமிழகத்தின் பழம் மருத்துவமான சித்த மருத்துவத்திற்கு என்று, எல்லா மருத்துவ மனைகளிலும், சித்த மருத்துவப் பிரிவு ஒன்றைத் தொடங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Sanction has been accorded to the opening of Siddha Wings in 30 Government Hospitals. 30 மருத்துவ மனைகளிலே நாம் சித்த மருத்துவத்திற்காகப் பிரிவுகளை ஏற்படுத்தி இருக்கிறோம் என்ற நல்ல செய்தியுடன், 200 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் கூட இதற்கென பிரிவு ஏற்படுத்தி, அதற்காக டாக்டர்களை 100 இடங்களில் நியமித்து உத்தரவு போட்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 16 முதல் 20 வரை, அவற்றுக்கான விடைகளுடன் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் அச்சிடப் பெறும்.

தனியார் துறை மூலம் கிராமங்களுக்கு மினி பஸ் விடும் திட்டம்.

*வினா எண். 16—திரு. சி. கோபால் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

கிராமங்களுக்குச் செல்லும் மினி பஸ்ஸை தனியார் துறையிடம் விடும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?